NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

ஸ்ரீ ஹரி:

மஹாராண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

ரூ.10

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே


| ஜோதி : 14 | டிசம்பர் 2008 | கலசம் 5 |
| --- | --- | --- |


www.madhuramurali.org / www.namadwaar.org

ஸ்ரீ ஹரி

# மஹாரண்யம்

# ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

அவர்கள் அருளாசியுடன்



## சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா



வழங்கும்

2ஆம் வருடம்

# தெய்வத் தமிழ் இசை விழா

**19/12/2008 முதல் 25/12/2008 வரை**

**நேரம்: மாலை 07.00 முதல் மணி 09.00 மணி வரை**

**இடம்: மஹோதயா ஹால்**

**#36, 4வது அவின்யூ, அசோக் நகர், சென்னை – 600 083**

பேருந்து நிறுத்தம்: [illegible] பேருந்து வழித்தடம்: 370, 170, 258

**19-12-2008, மாலை 6மணி துவக்க விழா சிறப்பு விருந்தினர்கள்**

**1. திரு. ஆளுடையபிள்ளை - Retd. IAS. 2. திருமதி.சீதாரவி - ஆசிரியர் கல்கி.**

### இசை வழங்குபவர்கள்:

| தேதி | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|
| 19/12/2008 | மாலை 07.00 | நாதஸ்வரம் – [illegible] திரு. M.P [illegible] மற்றும் திரு. M.P [illegible] |
| 20/12/2008 | காலை 10.00 | திருமுறை இன்னிசை – திரு. S. [illegible] குழுவினர் |
| 20/12/2008 | மாலை 07.00 | திவ்யப்ரபந்தம் – மதுரை திரு. T.N. சேஷகோபாலன் |
| 21/12/2008 | காலை 10.00 | இசைப் பேருரை – திருமதி. [illegible] |
| 21/12/2008 | மாலை 07.00 | திருப்புகழ் – நெய்வேலி திரு. சந்தானகோபாலன் |
| 22/12/2008 | மாலை 07.00 | கோபாலகிருஷ்ண பாரதி பாடல்கள் – [illegible] |
| 23/12/2008 | மாலை 07.00 | பாபநாசம் சிவன் பாடல்கள் – பாபநாசம் திரு. அசோக் ரமணி |
| 24/12/2008 | மாலை 07.00 | [illegible] – திருமதி. [illegible] |
| 25/12/2008 | காலை 10.00 | திவ்யப்ரபந்த [illegible] – திருமதி. [illegible] |
| 25/12/2008 | மாலை 07.00 | தமிழ் பஜனை பாடல்கள் – திரு. [illegible] குழுவினர் |

மேலும் விபரங்களுக்கு:

**சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா**

# [illegible], அசோக் நகர், சென்னை – 600 083.

044-2489 [illegible] E-Mail: [illegible]

Related Websites: [illegible]

NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"

வேணு: 14 டிசம்பர் 2008 கானம் : 5

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.

## இந்த இதழில் ...


| | |
|---|---|
| கீர்த்தனம் | 02 |
| மதுரமான மஹநீயர் - 154 | 03 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் | 07 |
| பாகவத பழம் -5 | 11 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் சிந்தனை மலர்கள் | 15 |
| குறுகிய மனப்பான்மை வேண்டாம் | 17 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 22 |
| ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 25 |
| மாலே மணிவண்ணா - 68 | 27 |
| அக்ஷரமணமாலை -152 | 29 |


- Advertisements in Madhuramurali are invited.
- We request all subscribers to renew subscriptions promptly
- Subscribers are requested to extend the benefit of Satsangham to their friends/relatives by introducing them to "Madhuramurali"
- For details please call +91-44-24895875

## கீர்த்தனம் – குருநாதன் வாழி! வாழி!

– உமாலட்சுமி

அன்பால் அகிலம் உள்ளே அவதரித்தாய்
பல்லாண்டு வாழி! வாழி!
ஆதியின் அருட்கனலில் தோன்றிய சோதியே (பல்லாண்டு)
இன்னல் நீக்கி இருமை போக்க உளம் கொண்டாய் (பல்லாண்டு)
ஈண்டு இச்சகத்தில் நாமஒலி பரவ
நாளும் வழிசெய்தாய் (பல்லாண்டு)
உள் மனக்கோவிலில் ஒளி வெள்ளம் பாய்ச்சினாய் (பல்லாண்டு)
ஊண் ஒடுக்கி உயிர் உருக்கி
ஒளிரும் தவம் உலகுக்களித்தாய் (பல்லாண்டு)
எந்தையும் தாயுமாய் எம்மை மாற்றிப் புடமிட்டாய் (பல்லாண்டு)
ஏழேழ் பிறவியிலும் யாம் செய்த
புண்ணியமே! புனிதமே! (பல்லாண்டு)
ஐயம் அகற்றி ஐம்புலன் அடங்கவே
உனைத் தொழுதோம் (பல்லாண்டு)
ஒரே நாமம்! ஒரே வழி! ஒன்றே மதம்!
ஒன்றே இறை! என ஓதிட்டாய் (பல்லாண்டு)
ஓங்கு பெயர்! ஓங்கு புகழ்! ஓங்கு சுயநலம் ஒழித்தாய்!
ஓங்குக உத்தமன் நாமமென்றாய்! (பல்லாண்டு)
ஔடதமே! அருந்தவமே!
எமை ஆண்டு கொண்ட அன்னையே (பல்லாண்டு)
அஃதே வழி! அஃதே வழி! அதுவே அரிநாமம்! அதுவே
நின்பாதம்! பல்லாண்டு வாழி! வாழி!

# மதுரமான மஹனீயர் – 154

(Dr. ஆ.பாக்யநாதன்)

தென் இந்தியாவில் மஹாமந்திரத்தை பிரச்சாரம் செய்தவர்களில் மிகவும் முக்கியமானவர் ஸ்வாமி அபேதானந்தா அவர்கள். ஸ்வாமிகள் மஹாமந்த்ரத்தின் ஸ்வரூபமாகவே வாழ்ந்தார்கள் என்றால், அது மிகையாகாது. இந்த வருடம், அவர் பிறந்து நூறு ஆண்டுகள் ஆகின்றது. அவர் ஆரம்பித்து வைத்த மஹாமந்திர கீர்த்தனம் அகண்டமாக, இரவு பகலாக, விடாமல் அவருடைய திருவனந்தபுரம் ஆஸ்ரமத்தில் நடந்து வருகின்றது.

ஸ்வாமி அபேதானந்தா ஸன்யாஸம் பெற்றுக் கொள்வதற்காக வீட்டைத் துறந்து கிளம்பும்பொழுது, அவருக்கு இளம் மனைவியும், ஒரு கைக்குழந்தையும் இருந்தது. எப்படி இளவரசராக இருந்த சித்தார்த்தர் இளம் மனைவியையும், ராஜ சுகங்களையும் துறந்து விட்டு, போதி மரத்தடியில் சென்று அமர்ந்தாரோ, அது போலவே ஸ்வாமி அபேதானந்தாவும் சிறு வயதில் சன்யாஸியாக கிளம்பினார். ஸ்வாமிகளின் வைராக்யம் இப்படி உத்தமமானதாக இருந்தது. இதை பன்முறை அவரது சரிதத்தில் பார்க்க முடிகிறது.

ஸ்வாமி அபேதானந்தா பரிவ்ராஜக சன்யாஸியாக இந்தியா முழுவதும் ஸஞ்சாரம் செய்து வந்தார். அப்பொழுது சிஷ்யர்கள் பலர் அவரிடம் ஒரு ஆஸ்ரமம் கட்ட வேண்டும் என விண்ணப்பித்தனர். ஸ்வாமி அபேதானந்தாவோ "ஒரு ஆஸ்ரமம் கட்ட வேண்டாம். பல ஆஸ்ரமம் கட்டுங்கள்" என்றார். இந்த பதிலால், ஒன்றும் புரியாத சீடர்கள் மறுபடி வினவ, ஸ்வாமிகளோ "ஒவ்வொரு இல்லத்திலும் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை மஹாமந்திர கீர்த்தனம் செய்து வந்தால், அதுவே எனது ஆஸ்ரமம். அப்படி கீர்த்தனம் செய்து வந்தால், நானும் அங்கெல்லாம் வருவேன். ஒரு ஆஸ்ரமம் கட்டி அதில் என்னை பார்க்க வருவதை விட, இப்படி பல ஆஸ்ரமங்கள் இருந்தால், நான் அங்கெல்லாம் வருவேனே" என்றார்.

மஹாமந்திர கீர்ததனம், எந்த அளவுக்கு, அனைத்து இல்லங்களிலும் நடைபெற ஸ்வாமிகள் விரும்பினார் என்பது இதிலிருந்து தெரிகிறது.

அபேதானந்தா ஸ்வாமிகள் மஹாமந்திர ஸத்ஸங்கம் நடத்தும்பொழுதெல்லாம், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வார்கள். மஹாமந்திர கீர்த்தனத்திற்காக மட்டும் இவ்வளவு பக்தர்களை ஒன்று கூட்டிய பெருமை அவரையே சாரும். மேலும் தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஆலயங்களிலும், அவருடைய மஹாமந்திர கீர்த்தனம் நடந்துள்ளது. ஸத்ஸங்கம் இல்லாத பொழுதெல்லாம் ஸ்வாமிகள் தனிமையையே விரும்புவார். இப்படி பல மாதங்கள் சேர்ந்தாற்போல் , அவர், அடிக்கடி தனிமையில் கழிப்பதும் உண்டு. ஸ்வாமி அபேதானந்தா மிகவும் எளிமையானவர். அவருக்கு அன்பர்கள் திருவனந்தபுரத்தில் ஒரு எளிமையான ஆஸ்ரமம் அமைத்தனர். அங்கு இருக்கும்பொழுது, பலமுறை ஸ்வாமிகள் காணாமல் போய்விடுவது உண்டு. எங்கே தேடினாலும், கண்ணில் அகப்பட மாட்டார். ஒருவரும் அறியாது ப்ருந்தாவனத்திற்கு வந்துவிடுவார். அங்கு வந்து, அன்னம் பிச்சை எடுத்து உண்டு வருவார். ஏதோவொரு மரத்தடியில் தனது காலத்தைக் கழிப்பார். ஸ்வாமி அபேதானந்தாவிற்கு ராதாதேவியிடம் அபார பக்தி இருந்தது. எப்பொழுதும் ராதையின் ஸ்மரணத்திலேயே, அடிக்கடி இருக்கும் ஸ்வபாவம் அவருக்கு இருந்தது. ராதாஷ்டமியின் போது ராதாதேவியின் ஜன்ம பூமியான பர்ஸானா போய்விடுவார்.

**எங்கே தேடினாலும், கண்ணில் அகப்பட மாட்டார். ஒருவரும் அறியாது ப்ருந்தாவனத்திற்கு வந்துவிடுவார். அங்கு வந்து, அன்னம் பிச்சை எடுத்து உண்டு வருவார்.**

அவர் உயிர் பிரிந்த பின், அவரது உடலில் 'மிருத களை' (மரணமடைந்த பின் சரீரத்தில் ஏற்படும் அவலக்ஷணங்கள்) என்பது சிறிதும் தென்படவில்லை. கை, கால்களின் இயக்கம் இயல்பாக இருந்தது. முகத்தில் ஒளி குன்றாமலேயே இருந்தது. இதை வெகு சில மஹான்களின் சரித்திரத்தில் தான் பார்க்க முடிகிறது.

*கங்கா தேவி, அவரது உடலில் ஒளிமயமாக புகுந்து விட்டாள். அதன்பின் அவர் மிகவும் ஒளிமயமாக தோன்றினார்.*

ஸ்வாமி அபேதானந்தா, விதேக கைவல்யம் அடையும் முன் ரிஷிகேஷில் இருந்தார். ஒருமுறை, அவர் முன், சாக்ஷாத் கங்கா தேவி தோன்றி, "யமுனைக் கரையில் தினமும் ஹரி நாம கீர்த்தனம் தவறாமல் நடந்து வருகிறது. ஆனால், எனது கரையில் நடப்பதேயில்லை. இதற்கு நீ உடனடியாக ஏற்பாடு செய்" என்றாள். ஸ்வாமி அபேதானந்தா உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்தார்.

ஸ்வாமி அபேதானந்தா, பூவுலகில், தனது வாழ்வை முடித்துக் கொள்ளும் முன், கங்கா தேவி, அவரது உடலில் ஒளிமயமாக புகுந்து விட்டாள். அதன்பின் அவர் மிகவும் ஒளிமயமாக தோன்றினார். தனது உயிர் பிரிந்தபின், தனது உடலை கங்கையிலேயே விட்டு விட வேண்டும் என்றும், எந்தவொரு அதிஷ்டானம் போன்றும் வைக்க வேண்டாம் என்றும், ஸ்வாமி அபேதானந்தா தெரிவித்து இருந்தார்.

ஸ்வாமி சிவானந்தரின் சீடர் ஸ்வாமி சிதானந்தா. இவரும் பெரிய மஹாத்மா. இவர்தான் ஸ்வாமி அபேதானந்தாவுக்கு இறுதி காலத்தில் அருகிலிருந்து கைங்கர்யம் செய்து வந்தார். இவர்தான் ஸ்வாமி அபேதானந்தாவின் விருப்பப்படி, அவரது உடலை ஒரு வெள்ளைத்துணியில் மூடி, கங்கையில் பல சீடர்கள் முன்னிலையில் விட்டார். அதிஆச்சர்யமான, இவரது சரிதத்தை நினைப்பதினாலும், கேட்பதினாலும், படிப்பதினாலும், சொல்வதினாலும், கொடிய

பாபங்களும் விலகும் என்றால் அது சற்றும் மிகையில்லை. பாபங்களை போக்குபவள் கங்கை. மஹாபாபங்களிலிருந்து விடுபட மஹாமந்திர கீர்த்தனம்தான் கலியில் சொல்லப்பட்டு உள்ளது. மஹாமந்திர கீர்த்தனம் அனவரதமும் செய்து வந்ததால், அதன் ஸ்வரூபமாகவே ஸ்வாமி அபேதானந்தா இருந்தார். பின்னாளில், கங்காதேவி, அவரது உடலில் வாஸம் செய்ததால், அவர் கங்கை நதியாகவே இருந்தார் என்பதும் சரியே. இவரை நினைத்தால் கங்கையை ஸ்மரித்த பலனும் உண்டு; மஹாமந்திர கீர்த்தனம் செய்த பலனும் வரும். பாரத தேசத்தில் உள்ள அனைவரும், அறிந்திருக்க வேண்டிய ஒரு பரம பவித்ரமான மஹாத்மா, ஸ்வாமி அபேதானந்தா.

சமீபத்தில், ஸ்வாமி அபேதானந்தா ஆஸ்ரமத்திலிருந்து ஒரு ஸன்யாஸினி, சென்னை ப்ரேமிக பவனத்திற்கு வந்து, நம் ஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் உரையாற்றினார். அவர் வந்திருந்தபொழுது ஒரு ஆச்சர்யமான சம்பவம் நடந்தது. அந்த ஸன்யாஸினி அவர்களின் உடலில் இருந்து ஒரு ஒளி கிளம்பி, ப்ரேமிக பவனம் முழுவதும் நிறைத்து விட்டது. மின்சார விளக்குகள், அந்த சமயம் ஒளியிழந்து காணப்பட்டன. இந்த ஒளியானது சிறிது நேரத்தில் மறுபடி அவரிடமே ஐக்கியமாகிவிட்டது. இப்படி இரண்டு முறை ஏற்பட்டது. "மஹாமந்த்ர கீர்த்தனத்தினாலேதான், இத்தகைய ஒளி அவரிடம் குடிகொண்டிருந்தது" என ஸ்ரீஸ்வாமிஜி தெரிவித்தார். இது, ஸ்ரீஸ்வாமிஜிக்கு மட்டும்தான் தரிசனமானது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மஹாத்மாவின் ஜயந்தியை (ஏப்ரல்12), சென்னையைச் சேர்ந்த Global Organisation for Divinity India Trust மிகவும் விமரிசையாக, சென்னை நாரத கான சபாவில் கொண்டாட தீர்மானித்துள்ளது, மிகவும் சந்தோஷம் தரும் விஷயம் ஆகும். பலரும் அறிந்திராத, இந்த அரிய விஷயங்களை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஒருநாள் ஸத்ஸங்கத்தில் பகிர்ந்து கொண்டார்கள்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

***கேள்வி : நாம் செய்யும் தெய்வீக ஸாதனைகளில், எதனால் முன்னேற்றம் ஏற்படும்?***

பதில் : முதலில் ஸாதனை செய்ய ஆரம்பிக்கும்பொழுதே, நமக்கு இது ஸித்தி ஆக வெகுகாலம் ஆகும் என்பதை மனதில் நன்றாக பதிய வைத்துக் கொள்ள வேண்டும். பொறுமையை இழக்கக் கூடாது.

இரண்டாவது என்னவென்றால், விட்டு விட்டு செய்யும் ஸாதனை பலன் தராது. நிரந்தரமாக, ஒருநாள் கூட விடாமல் செய்ய வேண்டும்.

மூன்றாவது என்னவென்றால், குரு, உபாஸிக்கும் தெய்வம், செல்லும் ஸாதனையின் மார்க்கம், ஜபம் செய்யும் மந்திரம் இவைகளை மாற்றாமலும் இருக்க வேண்டும். இவைகளை கடைப்பிடித்தால் தான், ஸாதனை கைகொடுக்கும்.

***கேள்வி : ஒருவருக்கு மூக்கிற்கு மேல் கோபம் வருகின்றது என்று வழக்கில் சொல்லப்பட்டு வருகின்றதே? அதன் பொருள் என்ன?***

பதில் : இரண்டு புருவங்களின் மத்தியில் உள்ள யோக சக்கரத்திற்கு 'ஆக்ஞா' என்று பெயர். தவம் உடையவர்களின் கோபம், சாபமாக மாறும்பொழுது, அதன் வழியாகத்தான் வெளிப்பட்டு அழிக்கும். கைலாயபதியான பரமேஸ்வரனும் தன்னுடைய கோபத்தை, புருவங்களின் மத்தியிலிருந்து வெளிப்படுத்திதான் மன்மதனை அழித்தார் என்பதை பார்க்கின்றோம். இதை கருத்தில் கொண்டுதான் மேற்படி வசனம் வழக்கத்தில் வந்துள்ளது.

**கேள்வி : நாரதரிடம் கலகமும், துர்வாஸரிடம் கோபமும் உள்ளதாக புராணங்களின் மூலம் தெரிந்து கொள்கின்றோம். ஜீவன்முக்தர்களான இப்பேர்ப்பட்டவர்களிடம் இத்தகைய தோஷங்கள் எப்படி இருக்க முடியும்?**

பதில் : "நீங்கள் சிவராத்ரி அன்றோ, வைகுண்ட ஏகாதசி அன்றோ கண்விழித்து புண்யம் சம்பாதித்துக் கொள்ள நினைக்கிறீர்கள். சும்மா உட்கார்ந்தால் தூக்கம் வருகின்றது. அதைத் தவிர்க்க, ஏதோ ஒரு செயலில் ஈடுபடுகின்றீர்கள். அப்பொழுதும் தூக்கம் வருகின்றது. யாராவது பத்து நண்பர்களுடன் சேர்ந்து, உலக விஷயமான பேச்சுகள் பேசி அரட்டை அடித்தால் தூக்கமே வரவில்லை. ஸ்வபாவமான தூக்கத்தை வென்று விடுகின்றீர்கள்". இப்படி நடப்பது நமக்கு அனுபவம். நமக்கு உலக விஷயங்களை பற்றிய எண்ணங்களை விடுத்து, மனதை ஆத்மாவில் ஒரு கணம் நிறுத்துவது என்பது துர்லபம். ஆனால், ஜீவன் முக்தர்களுக்கோ, மனதை ஒரு கணமாவது உலக விஷயங்களில் நிறுத்துவது மிகவும் கடினம். அவர்களுடைய மனது, சுத்த ஸத்வ நிலையை அடைந்து, எப்பொழுதும் பிரம்மத்திலேயே லயித்திருக்கும். பிராரப்தம் இருக்கின்றவரை, சரீரம் இருக்கும். அதை வைத்துக் கொண்டு, உலகத்திற்கு ஞானமார்க்கத்தை காட்டி அனுக்ரஹம் செய்ய வேண்டுமானால், அவர்கள் எப்பாடுபட்டாவது, ஏதோ ஒரு உலக விஷயத்தை பிடித்துக் கொள்ள வேண்டியுள்ளது. அப்படி பிடித்துக் கொண்டால்தான் அவர்களால் ஸஹஜ ஸமாதியில் இருந்துக் கொண்டு உலகத்துடன் கலந்து பழக முடியும். நாரதரும், துர்வாஸரும் அப்படித் தான் முறையே கலகத்தையும், கோபத்தையும் எடுத்துக் கொண்டார்கள். அதிலும், நாரதர் லலிதமான பக்தி மார்க்கத்தை அவலம்பித்தவராக இருந்ததால், அதற்கு ஏற்றாற்போல் ரஸமான கலகத்தையும், துர்வாஸர் தவ மார்க்கத்தை கை கொள்பவராதலால், அதற்கு ஏற்றாற்போல், கோபத்தையும், எடுத்துக் கொண்டது கவனிக்கத்தக்கது. ஆனாலும், அவர்களுடைய கோபமும், கலகமும் உலகிற்கு நன்மையையே செய்யும்.

# மதுரபுரி ஆஸ்ரம செய்திகள்

- இந்த வருடம் ஐப்பசி பௌர்ணமியை முன்னிட்டு மணிமங்கலத்தில் அமைந்துள்ள ஸ்ரீதர்மேஸ்வரர் ஸமேத ஸ்ரீமாங்களாம்பிகா கோவிலில் அன்னாபிஷேகம் நடைபெற்றது. அதற்கு நமது மிஷன் சார்பில், அரிசி மற்றும் அபிஷேக திரவியங்கள், வேஷ்டி மற்றும் புடவை சமர்ப்பிக்கப்பட்டது.

- 16/11/2008 – உலக நீரிழிவு நோய் தினம் மற்றும் உலக இருதய நோய் நினைவு தினம் ஆகியவற்றை முன்னிட்டு, நமது ஆஸ்ரம வளாகத்தில், Dr.Ashamoorthy (Prof. Cardiology, Ramachandra University) மற்றும் Dr.P.Moorthy (Prof. Cardio Thoracic Surgeon, Institue of Child Health, GH, Egmore) ஆகியோர் தலைமையேற்று நடத்த பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நமது ஆஸ்ரமத்தை சுற்றி உள்ள கிராமங்களில் இருந்து சுமார் 200க்கும் மேற்பட்ட மக்கள் வந்து கலந்து கொண்டு பயனடைந்தனர்.





---

- மஹாத்மா காந்திஜி தினமும் ஸ்ரீமத் பாகவத பாராயணம் செய்வதை பழக்கமாக வைத்துக் கொண்டிருந்தார். அவர் குண்டடிபட்டு இறந்த அன்று காலையில், அவருடைய நித்ய பாராயணத்தில் அவர் பாராயணம் செய்த கட்டம் 'கஜேந்திர ஸ்துதி' ஆகும்.

இடது: மேற்கு மாம்பலம், அயோத்யா மண்டபத்தில் வேத சமிதி (நவம்பர் மாதம் 16ம் தேதி) சார்பில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

வலது: பெண்ணையாறு கரையினில் ஒருநாள் ஸ்ரீஸ்வாமிஜி தியானத்தில் ஆழ்ந்திருந்தபொழுது





PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Zaah
TECHNOLOGIES

OUR SOLUTIONS

- SEARCH ENGINE OPTIMIZATION
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- WEB DEVELOPMENT

**M/s. Zaah Technologies India Pvt. Ltd.,**
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome,
Chennai 600 004
Phone: +91-44-43033313
**E-mail:** contact@zaahindia.com

## பாகவத பழம் 5

— ஸ்ரீஸ்வாமிஜி

'தர்மார்த்த காம மோக்ஷம்' - இதையே நான்கு விதமான புருஷார்த்தங்கள் என்பார்கள். தமிழிலும் அறம், பொருள், இன்பம், வீடு என்று வைத்தார்கள். இதில் தர்மத்திற்கே முதல் இடம் கொடுக்கப்பட்டுள்ளதைப் பார்த்தீர்களா? தர்மம் தவறி வாழ்ந்தால், மனிதனுக்கும், விலங்குகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். இறைவனை நேருக்கு நேர் பார்க்க முடியுமா? நம்மிடம் என்ன இருந்தால் இறைவனை நேருக்கு நேர் பார்க்க முடியும்? என்றால், மூன்றில் ஒன்றாவது இருக்க வேண்டுமாம். என்ன அந்த மூன்று என்கின்றீர்களா? தர்மம், சத்தியம், அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த மூன்றில், ஒன்றுகூட இல்லாதவருக்கு இறைவன் கிடைக்கமாட்டான்.

தர்மத்தைப் பற்றிப் பல்வேறு மஹரிஷிகள், எழுதி வைத்து விட்டுப் போய் உள்ளார்கள். அந்த தர்ம சாஸ்திரங்கள், பதினெட்டு. மனு தர்மம் என்று சொல்கின்றோமே அதற்கு 'மனு ஸ்ம்ருதி' என்று பெயர். இந்த தர்மத்தின்படி ஆட்சி செய்ததால்தான் ஒரு சோழராஜாவிற்கே 'மனுநீதிச்சோழன்' என்று பெயர் வந்தது. இதுபோல் பதினெட்டு ஸ்ம்ருதிகள் உள்ளன. இவற்றையெல்லாம் படித்து, இன்றைக்கு நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது நடக்காத காரியம். இன்றும் நீதி கேட்டுக் கொடுக்கும் ஒரு விண்ணப்பத்திற்கும் 'மனு' என்றே பெயர் இருப்பதைக் காணலாம்.

ஆனால், இன்றைய காலம் எப்படிச் சென்று கொண்டிருக்கிறது என்பது நான் சொல்லித்தான் தெரியவேண்டும் என்று அவசியம் இல்லை. இது, அவரவர்களுக்கே நேரடி அனுபவம் அன்றோ! அடிப்படையான பல தேவைகளை விட்டுவிட்டு, ஒருபக்கம் வியக்க வைக்கும் விஞ்ஞான வளர்ச்சி; மனிதனுக்கோ மனதில் சாந்தி கிடையாது. ஆனால் விஞ்ஞான வளர்ச்சி மட்டும் பிரமிப்பூட்டும்

அளவில் உண்டு! என்ன பயன்? இது எப்படி இருக்கின்றது என்றால், ஒருவனுக்குத் தலையோ வழுக்கை, அவன் விதவிதமான சீப்பு வாங்கி வைத்துக் கொள்வது போல் உள்ளது. தெய்வீகம் என்பது வளர்ந்திருக்கின்றது என்றாலும், இது பெரும்பாலும், காம்ய பக்தியாக (பலனை உத்தேசிக்கும் பக்தி) உள்ளது. தத்துவத்தை அடிப்படையாக கொள்ளாத பக்தி நிற்காது. ஜோதிடம், வாஸ்து, அதிர்ஷ்ட கற்கள் போன்றவைகளே பக்தியாகிவிடும் போல் உள்ளது; பணம் அதிகமாகப் புழங்குவதால் கோவில்கள், வேதபாடசாலைகள், அன்னதானம், ஆஸ்ரமங்கள் போன்றவைகள் புத்துயிர் பெற்றிருக்கின்றன. இப்படிப்பட்ட காலக்கட்டத்தில் நாம் இருக்கின்றோம். போகின்ற போக்கைப் பார்த்தால், வீதியில் யாராவது ஒரு சிறுவன் பட்டாசு வெடித்துக் கொண்டிருந்தால், அதைப் பொருட்படுத்தாமல் நாம் செல்வதுபோல், நாளைய மக்கள், குண்டு வெடிப்பையும் பொருட்படுத்தாமல் செல்வார்களோ என்னவோ? இதன் உச்சகட்டமாக, மனித வெடிகுண்டுகளின் அச்சுறுத்தல் வேறு!

நூறுமாடிகளில் மனிதன் வாழ்கின்றான். இதற்கு இடையில், பாவம்! பழக்கத்தினால் இவன் ஏதோ தருமம், ஆசாரம், அனுஷ்டானம் என்பதைப் புலம்பிக் கொண்டிருக்கின்றான். இதற்கெல்லாம் என்ன காரணம் என்று கேட்டால், புராணங்கள் எல்லாம் கலி என்று கூறுகின்றன.

கலி என்றால் என்ன? கலி மிகவும் பொல்லாதவனாம். நாம் வாழக்கூடிய இந்த யுகத்திற்கு கலியுகம் என்று பெயர். கிருதயுகத்தில் மக்கள் எல்லோரும் தர்மத்துடனும், சந்தோஷத்துடனும் வாழ்ந்தார்கள். அப்பொழுது பகவான், ஸத்வகுணமூர்த்தியாக வெண்மை நிறத்துடன் இருந்தான். அடுத்த யுகமான திரேதாயுகத்தில், பகவான் சிவப்பு வர்ணமாக இருந்தான். அப்பொழுது, மக்கள் ராஜஸ - ஸ்வபாவமுடையவர்களாக இருந்தார்கள். துவாபர யுகத்தில், இறைவன் நீலமாக மாறிவிட்டான். நீல நிறத்தில் ஒரு கருமையும் உண்டு. அப்பொழுதே மக்கள் தாமஸ

குணமுடையவர்களாக ஆகிவிட்டார்கள்.கலியுகத்திலோ பகவான் முழு கறுப்பு. அதனால், மக்கள் தாமஸ குணம் உடையவர்களாகவே இருப்பார்கள். நாடுகளைப் பொறுத்தவரை எங்கும் சண்டை, கலவரம், தீவிரவாதம் மலிந்திருக்கும். குடும்பத்தைப் பொறுத்தவரை, எல்லா விதமான தர்மங்களும் போய், பணம் ஒன்றே குறியாகிவிடும். இந்த யுகத்தைப் பற்றி ஒரு வரியில் சொல்ல வேண்டுமானால், இது 'பாவிகளைப் படைக்கும் யுகமாம்'. கூட்டம் கூட்டமாகப் பெருகி வருகிறது மக்கள் தொகை, ஆனால் பாருங்கள்! பூமியும், நீரும், இயற்கை வளங்களும் குறைகின்றன.

"என்ன ஸ்வாமிகளே! நீங்களே இப்படி பயப்படும்படி எழுதுகின்றீர்களே!" என்று கேட்கலாம். நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பதைத்தானே எழுதுகின்றேன். நான் எழுதுவது புதியது அல்லவே. வரப்போவதை எழுதவில்லை. வந்துவிட்டதைத்தான் எழுதுகின்றேன். "அப்பொழுது எல்லோருக்கும் கதியென்ன?" என்றால், அதை சொல்வதற்குத்தான், இத்தனை பீடிகை போட வேண்டியிருந்தது. எல்லோருக்கும் ஒரே கதி, பாகவத தர்மம்தான். பாகவத தர்மம் என்றால் என்ன? ஸ்ரீமத் பாகவதம் எதைத் தர்மம் என்று காட்டுகின்றதோ, அதுவே பாகவத தர்மம். 'சரி! அந்த ஸ்ரீமத் பாகவதம் எதைத் தர்மம் என்று காட்டுகின்றது?' என்கின்றீர்களா? அதைத்தான் நாம் இனி விவரமாகப் பார்க்கப் போகின்றோம்.

– கனியும்

ஒரு மனிதன் ஆன்ம விடுதலை பெறவில்லை எனில், பல பிறவிகளில் உழன்று வர வேண்டி வரும். ஒரு வேளை ஆடாய் பிறந்தால், வெட்டுவது என்பதைத் தவிர்க்கவே முடியாது. இப்படி பல பிறவிகளில் பல துன்பங்கள் உண்டு. ஆனால், இத்துணை பிறவிகளிலிருந்தும் விடுதலை பெற ஒரு வழியை வைத்துள்ளான் பகவான். அதுவே ஜீவன் முக்தி. ஜீவன் முக்தி எனும் நிலை இல்லை என்றால், ஈஸ்வரன் கருணை மிக்கவன் என்று சொல்லவே முடியாது. -ஸ்ரீஸ்வாமிஜி

வலது: மதுரபுரி ஆஸ்ரமத்தில் பூஜைக்குமுன் ஸ்ரீஸ்வாமிஜி தியானத்தில்

கீழ் வலது: சென்னை பிரேமிகபவனத்தில் நவம்பர் மாதம் 10ம் தேதி துளசிகல்யாணம் நடைபெற்றது

கீழே: மதுரபுரி ஆஸ்ரமத்தில் அக்டோபர் 29ம் தேதியன்று பூஜை நடைபெறுகிறது









மேலே: கோபாஷ்டமி (நவம்பர் மாதம் 6ம் தேதி) அன்று ஆஸ்ரமத்தில் ஒரு காட்சி.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் சிந்தனை மலர்கள்

✲ பலம் பொருந்திய மனிதனையோ, தனம் உள்ள மனிதனையோ, அறிவு உள்ள ஒரு மனிதனையோ தனக்கு பாதுகாப்பு என்று ஒரு மனிதன் நம்பி ஏமாற கூடாது. ஏனென்றால் இவர்கள் எல்லோருக்கும் மரணம் உண்டு. அவர்களை நம்பியிருக்கும் உனக்கு அவர்களுடைய மரணம் பெரிய பயத்தை தந்துவிடும். எங்கும், எப்பொழுதும், எந்த நிலையிலும் அழியாத இறைவனையே புகலிடமாக நினைத்து சரணாகதி செய்வாயாக.

✲ ஸாதாரண மக்கள் உலகத்தை பார்ப்பதற்கு பயப்படுவதில்லை. ஆனால் பகவானை பார்ப்பதற்கு பயப்படுவார்கள். ஆனால் மஹான்களோ உலகத்தை பார்ப்பதற்கு பயப்படுவார்கள். பகவானை பார்ப்பதற்கு பயப்பட மாட்டார்கள்.

✲ ரத்த ஸம்பந்தம் இல்லாத ஒருவருடைய கிட்னியை (Foreign Organ) ஒருவருடைய ஸரீரம் ஏற்றுக் கொள்ளாமல் ரிஜெக்ட் செய்து விடுகின்றது. அதுபோல் ப்ருக்ருதியால் ஆன மனதிற்கு தெய்வ விஷயமான ப்ரும்மம் Foreign Material, அதை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளிவிடும்.

✲ ஒரு குழந்தைக்கு தர வேண்டிய மருந்தை அதற்கு பிடித்த இனிப்பை மேலே பூசி தருவது போல், மனதிற்குள் தள்ள வேண்டிய தெய்வீகத்தை அதற்கு பிடித்த நாட்டியம், சங்கீதம், கலை, உல்லாசம், ஆர்ப்பாட்டம், படோடோபம், முதல் மரியாதை, புண்ணியம், புகழ் என்று ஏதோ ஒன்றை சாக்காக வைத்து உள்ளே அனுப்ப வேண்டியுள்ளது.

☼மதம்தான் உலகத்திற்கு திருமணம், ஒழுக்கம், கருணை, அன்பு, உயர்ந்த பண்புகளை கற்றுக் கொடுத்தது. இதன் அடிப்படையில் தான் பிற்காலத்தில் சமூக சட்டங்கள் உண்டாயின. மதம் என்ற ஒன்று இல்லாமலிருந்தால் மனிதர்கள் விலங்குகள் போல் இருந்திருப்பார்கள்.


☼ஹரி பக்தனை அவதாரங்கள் எவ்வளவு என்று கேட்டால் பத்து என்பான். குரு பக்தனோ பதினொன்று என்பான். ஏன் என்றால் குருபக்தனுக்கு அவனுடைய குருவும் ஒரு அவதாரமன்றோ.

☼பிரிந்து பேசுவது என்பது உலக இயற்கை. சங்கரரின் சித்தாந்தத்திலிருந்து ராமானுஜர் வேறுபடுகிறார். அவரிடமிருந்து மத்வர் வேறுபடுகிறார். சங்கரரின் சித்தாந்தத்தில் கூட பிரிவுகள் உண்டு. 'சிவாத்வைதம்' என்றுதான் சங்கரர் சொல்வதாக அப்பையதீக்ஷிதர் சொல்கிறார். ராமானுஜரின் மார்க்கத்திலும் பிரிவுகள் உண்டு. வடகலை, தென்கலை சம்பிரதாயங்களிலும் கூட பிரிவுகளுண்டு. அப்படியே மத்வ சம்பிரதாயத்திலும் காணப்படுகிறது. இது இயற்கை. பிற சித்தாந்தங்களை ஒப்புக் கொள்ளாமல், அதே சமயம் வெறுக்காது, தனது மார்க்கத்தை பின்பற்றலாம். உலகில் பல்வேறு பாகத்திலுள்ள மனிதர்களுக்கு பல பழக்க வழக்கங்கள். ஆனால், எல்லாவற்றையும் ஒன்றாக வைக்க முடியுமா? முடியாதல்லவா? ஆயின் அனைவரும் பிறரை ஏற்றுக்கொண்டு அன்பு பாராட்ட முடியும். அது சாத்தியம். அதுதான் ஆன்மீகத்திலும் முடியும். There can be unity but no uniformity.

☼கோவிலில், ஸ்தல வ்ருக்ஷம் என்று வைப்பதன் மூலம் மரம் வளர்க்க வேண்டும், மரங்கள் அழியக் கூடாது என்று நமது பெரியோர்கள் உணர்த்தியுள்ளனர். கோவில்களில் குளங்கள் வெட்டியதன் மூலம் மழைநீர் சேகரிப்பும் செய்துள்ளனர்.

## குறுகிய மனப்பான்மை வேண்டாம்

- முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம்



நவம்பர் 10, 2008 அன்று நமது முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், திருச்சூரில் ஸ்ரீ ராமக்ருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஸ்வாமி ரங்கநாதானந்தா அவர்களது 100வது ஜயந்தி விழாவில் பங்கு கொண்டு உரையாற்றினார். இது "ஸ்வாமி ரங்கநாதானந்தா ஆன்மீக, சமுதாய, பண்பாட்டு மையம்" சார்பாக நடத்தப்பட்டது. இதில் டாக்டர் அப்துல் கலாமின் உரையை இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் நவம்பர் 11ம் தேதியன்று வெளியிட்டது. அதன் தமிழாக்கத்தை இங்கே தருகிறோம்.

"உலக மக்களனைவரும் தம்தம் பண்பாட்டிலும், மதத்திலும், மொழிகளிலும், சமூகத்திலும் கட்டுண்டு இருக்கின்றனர். இதை உதறி, அனைவரும் உலக குடிமக்களாக மாற வேண்டும். இதற்கு அனைவரும் குறுகிய மனப்பாங்குடன் கூடிய சிந்தனையை தவிர்க்க வேண்டும்" என்று திரு.கலாம் கூறினார்.

மேலும் "விவேக சூடாமணியின் செய்தி" எனும் ஸ்வாமி ரங்கநாதானந்தாவின் புத்தகத்திற்கு தாம் முன்னுரை எழுதி வருவதாக கூறிய திரு. கலாம் அதைப்பற்றி பேசும்பொழுது, "விவேக சூடாமணியில் சொல்லப்பட்டிருப்பது ஒரு விஞ்ஞானம். இது உலகில் உள்ள ஆண், பெண் அனைவரும் ஒரே ஒன்றிய சமுதாயமாக வளர கற்றுத் தருகிறது. ஆண், பெண் இருபாலருக்கும் உத்தம அறிவை பெறுவதன் வழியை போதிப்பது மட்டுமின்றி, அனைத்து மதங்களையும், சமூகங்களையும், பண்பாடுகளையும், நாகரீகங்களையும் கடந்து விவேக சூடாமணி பொதுவானதாக இருக்கிறது. விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் நாற்கோண சிந்தனையையும், (Unified field theory relating to Four


Dimensional Continuum) ஸ்வாமி ரங்கநாதானந்தா மேற்கோள் காட்டும் விவேக சூடாமணியின் 239வது பாடலும் ஒப்பு நோக்க தக்கது. இவை இரண்டின் பாலும், (ஐன்ஸ்டீனின் நாற்கோண சிந்தனை மற்றும் ஆதிசங்கரரின் ப்ரும்ம தத்துவம்) ஆராய்ந்து ஒன்றிற்கு ஒன்று உள்ள தொடர்பை உறுதிப்படுத்துவது ஆய்வாளர்களுக்கு தற்பொழுது அவசியம் என்று நான் எண்ணுகிறேன். ஆய்வாளர்கள், இந்த ஆய்வின் முடிவுகள் மூலம் பிரபஞ்சமானது எப்படி உருவானது என்பதை தெரிந்து கொள்ள முடியும். உலக சமூகத்தில் எங்கும் பரவலாக நிலவி வரும் அமைதியின்மை கொண்ட இத்தருணத்தில் ஒவ்வொரு உயிரிலும் ஸர்வ வல்லமை வாய்ந்த இறைவன் உறைகிறான் என்பதை புரிந்து கொள்வது அவசியமாகிறது. இந்த வேற்றுமையில் உள்ள ஒற்றுமையை (உயிர்கள் பல, இறைவன் ஒருவனே) புரிந்து கொண்டால் மனித சமுதாயத்திற்கு ஒரு முன்னேற்றம் நிறைந்த, மகிழ்ச்சியான, நிறைவான எதிர்காலம் உருவாகும்" என்று கூறினார்.

பின்னர், திரு. கலாம் வடக்க ப்ரம்மஸ்வாமத்தில் உள்ள வேத ஆராய்ச்சி மையத்தைத் திறந்து வைத்து பேசும்பொழுது, அறிவியலாளர்களையும், வல்லுனர்களையும் ஸமஸ்கிருதத்தில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களை ஆய்வு செய்யுமாறு வற்புறுத்தினார். "ஸமஸ்கிருதம் மிக பழமையான ஒரு மொழி. நினைவு தெரிந்த காலத்திலிருந்து இது இருந்திருக்கிறது. தொன்மையான இம்மொழியில் நமது ஸனாதனமான நூல்களில் உள்ள கருத்துக்கள் குறித்து பல நாடுகள் ஆய்வு செய்து வருகின்றன. நமது வேதத்தில், குறிப்பாக, அதர்வண வேதம் குறித்து ஆய்வு செய்ய வேண்டியது பல உள்ளது. இது குறித்து ஆய்வு செய்து, அறிவியல் தொழில் நுட்பம், மருத்துவம், விண் ஊர்தி, பொருட்களின் தன்மை(material science) ஆகிய துறைகளுக்கு தேவையான பல உண்மைகளை தெரிந்து கொள்ள முடியும்" என்று கூறினார். மேலும்,

ஓலைச்சுவடிகளில் ஸமஸ்கிருத நூல்களை எழுதி பாதுகாப்பதையும் திரு. கலாம் வலியுறுத்தினார். வேத ஆராய்ச்சி மையத்தில் உள்ளோர் வேதக்கல்வி தவிர இதிலும் கவனம் செலுத்த வேண்டுமென கூறினார். இது தவிர, இந்த மையம் பெரிய மேதைகள், இதிஹாஸங்களை இயற்றிய வால்மீகி, வ்யாஸர், பெருங்கவியான காளிதாஸ், இலக்கணத்தில் ஆசிரியரான பாணினி போன்றோர் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும்" என்றும் கூறினார்.

நன்றி- "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளேடு(11-11-2008)

(தமிழாக்கம் - பாலகிருஷ்ணன்)



## வாசகர்களின் கவனத்திற்கு


ஸ்ரீ ராமானுஜம்

பொறியியல் பட்டதாரியான **திரு. M.K. *ராமானுஜம்*** அவர்கள் தன்னுடைய பொறியியல் படிப்பை டில்லியில் 1992ல் பூர்த்தி செய்தார். பிறகு சில கம்பெனிகளில் வேலை செய்து, கடைசியாக VISTEON கம்பெனியில் பொது மேலாளராக வேலை பார்த்து வந்தார். ஸ்ரீஸ்வாமிஜி, நாமபிரச்சாரத்திற்கு பிரசாரகர்கள் தேவைப்படுகின்றார்கள் என்று சொன்ன உடனே, தான் பார்த்து வந்த வேலையை 2006-ல் ராஜினாமா செய்தார். தன்னை முழுநேரமாக நாம பிரச்சாரத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டு அமெரிக்கா, துபாய், மஸ்கட், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நைஜீரியா, சிங்கப்பூர், மலேஷியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு சென்று, ஆங்காங்கு ஸத்ஸங்கங்களை ஊக்குவித்து, நாம பிரச்சாரம் தொடர்ந்து நடைபெற செய்து வருகிறார்.

சமீப காலமாக, ஸ்ரீஸ்வாமிஜி தனிமையிலும், அதிக நேரம் பூஜை, ஜபம், தியானம் என்றுமிருப்பதால், அதிகம் வெளியே செல்வதில்லை. அதற்கு, ஸ்ரீஸ்வாமிஜியின் உடல் அசௌகர்யமும் ஒரு காரணம். ஆகவே, மேற்கொண்டு நாம பிரச்சார விஷயமான விஷயங்களையும் , நாம பிரச்சாரத்திற்காக ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்ட

கேந்திராக்கள், நாமத்வார் போன்றவற்றை நிர்வகிக்கும் பொறுப்பையும் அவரிடம் கொடுத்துள்ளார். இவரைப் போல, மென்பொருள் பட்டதாரியான 'கச்சியப்ப நம்பி' எனும் *ஸ்ரீபாலாஜி ராமச்சந்திரன்* அவர்கள் அமெரிக்கா சென்று அங்கு சில வருடங்கள் தங்கி பணிபுரிந்து வந்தார். அவரும் வேலையை உதறித்தள்ளிவிட்டு, நாம பிரச்சாரம் என்ற ஞான வேள்வியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயல்பட்டு வருவது எல்லோருக்கும் தெரியும். இப்பொழுது ஸ்ரீராமானுஜம், ஸ்ரீபாலாஜி ராமச்சந்திரன் இருவரும் இணைந்து மேற்படி விஷயங்களை நிர்வகிப்பார்கள் என்பதை இதன் மூலம் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் நாமத்வார் சம்பந்தமான அனைத்து விஷயங்களுக்கும் இவ்விருவரிடம் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.



ஸ்ரீபாலாஜி ராமச்சந்திரன்

"GOD SATSANG". Global Organization for Divinity India Trust, 10/26, First Floor, Ramakrishnapuram 2nd Street, West Mambalam, Chennai Ph:-044-23718351. Email: contact@godindia.org, contact@namadwaar.org

இப்படிக்கு

-Dr. A. பாக்யநாதன் - Personal Secretary to Srï Swamiji

# பாலகர்களுக்கு ஒரு கதை



## உழைப்பும் ஊக்கமும்

அறிவியலில் அசாதாரணமான கண்டுபிடிப்புகளை செய்த வல்லுனர்கள் பலரிடம் வாழ்க்கைக்காக கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்று இருக்கும். இந்தியாவைச் சேர்ந்த கணிதமேதை ராமானுஜம் அமானுடமான சக்தியின் துணை கொண்டு பல நுணுக்கமான தீர்வுகளை சொன்னார் என தெரிகிறது. இன்றும் பலரால் அதை புரிந்துக் கொள்ள முடியவில்லை என்பது நிதரிசனமான உண்மை. ஆயின், பல விஞ்ஞானிகள் உழைப்பையும், ஊக்கத்தையும் மூலதனமாகக் கொண்டு காரியங்களை சாதித்திருக்கின்றனர் என்பதும் உண்மை.

'ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது' என்பர். அஃதாவது ஏட்டிலே வரைந்த சுரக்காய் சமையலுக்கு பயன்படாது. பல உயர்ந்த பட்டங்களை பெற்றாலும், அதை உபயோகிக்காவிடில் பட்டம் பெற்றது வீண்தானே?

'தொட்டனைத்தூறும் மணற்கேணி, மாந்தர்க்கு

கற்று அனைத்தூறும் அறிவு' என்றார் வள்ளுவர். நீர் எடுக்க, எடுக்கதான் கிணறு ஊறும். பயில்வது(கற்பது) தொடர்ந்தால்தான், அறிவு வளரும். ஆழ்ந்து தொடர்ந்து பயின்றால்தான் அறிவு வளரும். பயில்வது என்பது அறிவின் பயன்பாட்டையே குறிக்கிறது. கல்வியில் ஆர்வம், சுற்றுப்புறம் ஒவ்வொரு கணமும் எதை காட்டுகிறது என்பதின் நுட்ப அறிவு, ஆர்வத்தினால் அயராத உழைப்பு, தோல்வியை வெற்றியின் படியாக கருதுவது ஆகியவையே ஒரு விஞ்ஞானிக்கு தேவையான இன்றியமைதாத மூலதனம். இவை இருந்து, பொருட்களின் பௌதீக, வேதியியல் தன்மைகள் நன்கு தெரியுமாயின் அவர் மறக்க முடியாத கண்டுபிடிப்புகளை செய்வது திண்ணம்.

19ம் நூற்றாண்டு மத்தியில் அமெரிக்காவில், ஒரு பள்ளியில், ஒரு சிறுவனை வெளியில் அனுப்பி விட்டனர். அவன் படிப்புக்கு

லாயக்கில்லை என்று சொல்லி விட்டனர். அவன் தாய் அதை நம்பவில்லை. தன் மகன் பெரிதாக வருவான் என நம்பினாள். அவளுக்குத்தானே தெரியும், மகனின் புத்திக்கூர்மையை பற்றி! அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. உலகமே போற்றும் ஒப்பற்ற 1000க்கும்மேற்பட்ட நவீன கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்த **தாமஸ் ஆல்வா எடிசனே** அந்த சிறுவன்.

மின்சாரத்தின் நுட்பங்களை, அதன் பயனாற்றலை, உலகுக்கு அறிவித்த அமெரிக்கர் இவரே. இன்று நாம் இன்றியமையாததாக கருதும் மின்சார விளக்கு எடிசனின் கண்டுபிடிப்புகளில் மிகச் சிறந்தது. சப்தத்தை பதிவு செய்யும் க்ராமஃபோன், ஒளிப்பதிவு செய்யும் கேமரா ஆகியவையும் இந்த செவிட்டு மனிதரிடம் இருந்து வந்தவைதான். ஆம், எடிசனுக்கு சரியாக காது கேட்காது. என்ன, ஆச்சரியப்பட்டு விட்டீர்களா?. மேற்கொண்டு பார்க்கப்போகும் சம்பவம் இன்னும் ஆச்சரியம் தரக்கூடியது.

> *போ போ, அம்மாவையும் அவளது தோழிகளையும் உடனே வரச்சொல். இவ்வளவு பெரிய பெருந்தீயை அவர்களால் எங்காவது பார்க்க முடியுமா என்ன? ஓடு!*

இவருடைய அறிவியல் ஆய்வுக்கூடமானது ஒருமுறை தீப்பிடித்துக் கொண்டது. நிமிடங்களில் பல உபகரணங்கள், மூலப்பொருட்கள், சூத்திரங்கள் அடங்கிய ஏடுகள், ஒளிநாடாக்கள் என ஏராளமானவை பற்றிக்கொண்டு எரிந்தன. இது ஒரு மாலை நேரத்தில் நடந்தது. எடிசனின் மகன் சார்லஸ், இது குறித்து தெரிந்து, மிகவும் பயந்து, அப்பாவை தேடி வந்தான். அப்பாவான எடிசன் அவனை பார்த்து “போ போ, அம்மாவையும் அவளது தோழிகளையும் உடனே வரச்சொல். இவ்வளவு பெரிய பெருந்தீயை அவர்களால்

எங்காவது பார்க்க முடியுமா என்ன? ஓடு!" என்றார்.



இப்படி ஒரு மனநிலை சாத்தியமா என கற்பனை கூட நம்மால் செய்ய முடியாது. ஆயின் இது உண்மை! அப்பொழுது அவருக்கு வயது 67. அதற்கு பின் அவர் செய்தது தான் பெரிய அற்புதம். தீ தணிந்த பின், தொழிலாளர்களை அழைத்து, "மறுபடி இந்த இடத்தில் இதைவிட பெரிய தொழிற்சாலை கட்டுவோம். கவலையை விடுங்கள்" என ஊக்கமுடன் சொன்னார். சொல்லிவிட்டு, சற்றும் கவலையுறாமல், தூங்கப் போய்விட்டார். மரணத் தறுவாயில் எடிசன் இருக்கும்பொழுது (1931) ஒரு நிருபர் எடிசனிடம், "அய்யா! தாங்கள் எதனால் இப்படி ஒரு அற்புத விஞ்ஞானியாக, அதிபுத்திசாலியாக இருக்க முடிந்தது?" என்றார். அதற்கு எடிசனின் பதில்தான் நம்மை மலைக்க வைக்கிறது. "**ஒரு சதவீத ஊக்கமும், தொண்ணூற்று ஒன்பது சதவீத உழைப்பும் தான் நான் இப்படி இருக்க காரணம்**" என்றார் எடிசன்.

> *ஒரு சதவீத ஊக்கமும், தொண்ணூற்று ஒன்பது சதவீத உழைப்பும் தான் நான் இப்படி இருக்க காரணம்*


எடிசன், தான் கூறியபடிதான் வாழ்ந்தார் என்பதற்கு மேற்கூறிய சம்பவமே உதாரணம். நம்பிக்கை, ஊக்கம், உழைப்பு இருந்தால் முதன்மையாக வரலாம் என்பதற்கு எடிசன் ஒரு எடுத்துக்காட்டு.

**Instead of influencing, be an inspiration.**

*- Sri Muralidhara Swamiji*

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி



ராதாக்ருஷ்ணரின் தரிசனத்திற்குப் பிறகு, ராதாரமணருக்கு விரஹாக்னி பெருகிவிட்டது. இச்சம்பவத்திற்கு பின் ராதாக்ருஷ்ணரிடம் அவருக்கு 'என்னுடையவர்கள்' என்ற மமதை மிகவும் பெருகிவிட்டது. மற்ற யாரை விடவும், நமக்கு இவ்வளவு நெருக்கமாக இருக்கும் இவர்கள் மற்ற யாரை விடவும், தொலைவில் இருப்பதை நினைத்து நினைத்து, அவரது ஹ்ருதயம் வெடித்துவிடும் போலிருந்தது. இந்த விரஹத்தினால் கம்பம், கண்ணீர் போன்ற ஸாத்விக பாவ லக்ஷணக்ங்ள் அவரிடம் எப்பொழுதும் காணப்பட்டன.

விஹார வனத்தில் வெகுநாள் பஜனை செய்தபின், பாபா கோவர்த்தனத்திலுள்ள ஒரு குகையில் வஸிக்கலானார். இப்பொழுது அவரிடம் பல பக்தர்களும் சிஷ்யர்களும் வந்தார்கள். பல பக்தர்கள் அவரை தங்களின் இல்லங்களுக்கு அழைத்துவந்து, சில நாட்கள் வைத்துக் கொண்டு ஸேவை செய்வார்கள்.

இவ்வாறு அவர் ஒருமுறை ஜெய்பூரிலுள்ள ஒரு பக்தர் வீட்டிற்கு சென்றிருந்தார். ஒரு இரவு ராதை கனவில் தோன்றி 'விரைவில் ப்ருந்தாவனம் வந்தடைவாய்' என்று கூறி மறைந்தாள். மறுநாள் காலை தனது சிஷ்யரான பலதேவராம் என்பவரிடம் 'ராதாராணி என்னை ப்ருந்தாவனம் வரச்சொல்லியிருக்கிறாள். சீக்கிரம் என்னை அங்கு கொண்டு விட்டுவிடு' என்றார். வண்டியில் போகும்போதே, வழியில் பல பக்தர்களிடம் பிரியாவிடை கூறிக்கொண்டே சென்றார் பாபா. இதைப் பார்த்த பலதேவராமின் மனதில் பெரும் ஸந்தேகம் ஏற்பட்டது. வெகு காலத்திற்கு பின் அவர் ப்ருந்தாவனம் செல்வதினால், இப்படி செய்கிறார் என்று ஸமாதானம் செய்துக் கொண்டார். அவரை, ராதை தனது நித்ய ப்ருந்தாவனத்திற்கு அழைத்துவிட்டாள் என்று யார் அறிவார்?

ப்ருந்தாவனத்தில் ஆத்மாராம் ஸர்மா எனும் பக்தரின் வீட்டையடைந்தார்கள். மாலையில் லோயிபஜார் சென்று, அங்கு ராதா-க்ருஷ்ணர், கௌர்-நிதாயியின் சிறு படங்களை வாங்கினார். பலதேவராமரைப் பார்த்து, "நீ திரும்பி வீட்டிற்கு போ! நான் முராரிலால் (மற்றொரு பக்தர்) வீட்டிற்கு சென்று விட்டு வருகிறேன்" என்றார். பலதேவராம், ஆத்மாராமர் வீட்டிற்கு சென்றுவிட்டார். இரவு வெகுநேரம் ஆகியும் ராதாரமணர் வீட்டிற்கு வரவில்லை. கவலைகொண்ட பலதேவராம், முராரிலால் வீட்டிற்கே சென்றார். அங்கு, ராதா-ரமணதாஸரான ராதாரமணர் வரவேயில்லை என்று அப்பொழுது தான் தெரிந்தது. பக்தர்கள் அனைவரும் சேர்ந்து அவரை எல்லா இடத்திலும் தேடினார்கள். இரண்டு நாட்களுக்குப் பின்பும் பாபாவை கண்டுபிடிக்க முடியவில்லை. எல்லோரும் மிகவும் கவலை கொண்டார்கள். அவர்கள் ஸந்தேகம் உண்மையாயிற்று. இரண்டு நாட்கள் கழித்து நாளிதழ் ஒன்றில் 'நிதிவனத்தில் ராதாராணியின் 'ரங்கமஹால்' அடியில் உள்ள ஒரு குகையில் ஒரு பாபாவினுடைய உடல் கண்டுபிடிக்கப்பட்டது' என்ற செய்தியை பார்த்து பக்தர்கள் அங்கு விரைந்தார்கள். அங்கு ராதாரமணதாஸரின் உடலைக் கண்ட பக்தர்களின் துக்கத்திற்கு எல்லையே இல்லை. ஆனால் தனது பக்தன் இனியும் இந்த பூத உடலின் வேதனையை அனுபவிக்க வேண்டாம் என்ற கருணையினால் ராதாராணியே பாபாவை ஸித்தமஞ்ஜரி ரூபம் அளித்து தனது நித்ய தாமத்தில் சேர்த்துக் கொண்டாள் அன்றோ! (தொடரும்)

*உலக விஷயங்களில் எனக்கு தாமஸ புத்தியும், பகவானை அடைய வேண்டும் என்ற விஷயத்தில் ராஜஸ புத்தியும், பகவானை அடைய செய்யும் ஸாதனை விஷயங்களில் ஸாத்வீக புத்தியும் என்றும் எனக்கு நிலைத்து இருக்கட்டும்*

*- ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி*

# மாலே மணிவண்ணா – 67

—மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

காசிபருக்குத் திதியிடம் தோன்றிய அசுரர்களில் மூத்தவன் இரண்ய கசிபு. அவன் கதையைச் சொல்லிய பரிபாடல் ஆசிரியர், அவன் தம்பியாகிய இரண்யாக்ஷன் கதையையும், அடுத்துச் சொல்ல வருகிறார். 'பொன்கணான்' என்று கம்பர், இவன் பெயரை அழகாகத் தமிழ்ப்படுத்திச் சொல்வார்.

பிருங்கலாதன் என்று பிரகலாதன் பெயரைச் சொல்லிய ஆசிரியர், அவன் தந்தை என்று இரண்யகசிபைச் சொன்னாரே அன்றி அவன் பெயரைச் சொல்லவில்லை. அதுபோலவே அவன் தம்பியாகிய 'பொன்கணான்' எனப்படும் இரண்யாக்ஷன் பெயரையும், சொல்லாமல் நிகழ்ச்சியை மட்டும் கூறி அமைவது நினைத்தற்குரியது.

தீயவர்கள் பெயரைச் சொல்வது கூட, அவர்களுக்கு ஒருவகையில் முதன்மையும் சொம்பரமும் ஆகும் என்று கருதினார் போலும்.

ஒருமுறை, இரண்யாக்ஷன் பூமியைக் கைப்பற்றிக் கொண்டு கடலினுள் மறைந்தான். திருமால், சுவேத வராக உருவம் அதாவது வெண் பன்றி உருவம் எடுத்துத் தன் கொம்பினால் அசுரனைப் பிளந்து அழித்து பூமியைப் பண்டுபோல நிலைத்து நிற்கச் செய்தார் என்பது விஷ்ணு புராண வரலாறு. சுவேத வராகம் உலகை நிலைநிறுத்திய காலத்தை ஒட்டியே 'சுவேத வராக கல்பம்' என்று சங்கல்பத்தில் இன்றும் என்றும் சொல்லிவரும் பழக்கம் ஏற்பட்டது. இந்த நீண்ட மரபொன்றே, திருமாலின் இந்த அவதாரச் சிறப்பை விளக்கப் போதுமானது.

இரண்யாக்ஷன் பூமியைக் கொண்டு சென்றதாக, அதனைப் பரிபாடல் கூறாமல், முன்னொரு காலத்தில் பூமி நீராற் சூழப்பட்டு வெள்ளத்தில் அழுந்தியபோது திருமால் வராகமாய்த் தோன்றி கருமையும் வன்மையும் உடைய கழுத்தால் தாக்கி உலகத்தை

வெள்ளத்தினின்றும் எடுத்துத் திருத்தியமைத்துச் செய்தார். இச்செய்தி உலகை நிலைகுலையாது, காத்து நிற்கின்ற, பலரும் புகழும், மகாமேரு மலையின் தன்மையோடு ஒக்கும் என்று திருமாலின் செயலை மேருமலையின் செயலோடு ஒப்பிட்டுத் துதிக்கிறது.

"புருவத்துக் கருவல் கந்தத்தாற்
தாங்கி இவ்வுலகம் தந்தடிப் படுத்ததை நடுவண்
ஓங்கிய பலர் புகழ் குன்றினோடு ஒக்கும்" (22-24)

(பூர்வம் என்பது முன் என்னும் பொருள் உடையது. அது புருவம் என்றாகியது கரு வல் = கருமை வன்மையுடைமை. சுவேத வராகம் என்னாமல் கருமை என்று பரிபாடல் கூறியுள்ளது. கழுத்து மட்டும் கருமை என்று பொருள் கூறி அமைக்கலாம். கந்தரம் - கழுத்து. கந்தரத்தால் என்பது கந்தத்தால் என ஏடெழுதுவோர் பிழையால் ஆகியது - இவ்வுலகம் தந்து அடிப்படுத்ததை - இவ்வுலகத்தைக் கொண்டு வந்தது மட்டும் அல்லாமல் நிலைநிறுத்திக் காத்தார் என்பதை 'அடிப்படுத்தல்' என்பதனாற் கூறினார்.)

மேருமலை உலகின் நடுவில் உயர்ந்தோங்கியுள்ளது. அதனால் உலகம் நிலை குலையாமல் நிற்கிறது. இக்கருத்தை இமயமலையில் தேவர் எல்லாம் கூடி இருத்தலின், வடகோடு தாழ்ந்து தெற்கு உயர்ந்தது என்பதும், அகத்தியர் தெற்கே சென்றிருப்ப, அதனால் பூமி சமம் ஆயிற்று என்பதும் புராணச் செய்தியாகும். அதனை இதனோடு ஒப்பிட்டு உணரலாம்.

(தொடரும்)

உடம்பில் தூசு படிந்தால், தண்ணீர் விட்டுக் கழுவினால் போய்விடும். நெருப்புக் காயம் பட்டால் எளிதில் போகாது. அதுபோல், ஒருவன் எவ்வளவு ஆர்வமாக ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறானோ, அதைப் பொறுத்து அவனை வாஸனைகள் பற்றும். ஆர்வமற்று செய்யும் காரியம் ஒருவனை பந்தத்தில் பெரிதும் கொண்டு சேர்க்காது. பற்றுடன் செய்யும் தவறான காரியம் பெரும் பந்தத்திலும், வாஸனையிலும் கொண்டு சேர்க்கும்.

-ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# அக்ஷரமணமாலை



## ஸ்ரீ ஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து – 152

நோக்கியே கருதி மெய் தாக்கியே

பக்குவம் ஆக்கி நீ ஆண்டருள் அருணாசலா

பகவான் ரமண மஹரிஷிகளிடம் வருவோர் யாராவது இறந்து விட்டால், பகவானிடம் சொல்வர். பகவானும் அவரைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் நல்லதாக சொல்லி ஸ்மரிப்பார். இதுவே அத்தகையோரை மிக உயர்ந்த கதிக்கு கொண்டு சேர்க்கும். ஒருமுறை கந்தசாமி எனும் நபர் இறந்து விட்டார். அவரைப் பற்றி யாருக்கும் நல்ல அபிப்ராயம் கிடையாது. பகவானிடம் இது பற்றி தெரிவித்து விட்டு, 'அவர் என்னதான் சொல்கிறார் பார்க்கலாம்' என அனைவரும் நினைக்கும்பொழுது, ரமண மஹரிஷிகளோ, எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில், அவரைப் பற்றி சில நல்ல விஷயங்களை (யாரும் கவனித்திராத) கூறி ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். இதுவும் நினைவினால் அருள் செய்வதுதான்.

தொட்டு அருள் செய்வது என்பது மிகவும் பிரசித்தியாக புராணங்களிலும் பேசப்படுகிறது. (அக்ஷரமணமாலையிலும் "தொட்டருட்கை, மெய்" என்ற பாடலிலும் இது பேசப்படுகிறது). சிறுவன் துருவன் கடும் தவம் செய்து பகவானை நேருக்கு நேர் பார்த்தபொழுது, பகவான் தனது சங்கினால் தொட்டு அருள் செய்தார் என வருகிறது. நரஸிம்மாவதாரம் செய்தபொழுது பகவான் தனது கரங்களை பிரஹ்லாதனின் சிரஸின் மேல் வைத்து அருள் புரிந்தார் என வருகிறது. கோபிகளும் கிருஷ்ணனிடம் "சிரஸி தேஹினாம் ஸ்ரீகரக்ரஹம்" என்று பகவானை, அவனது கரங்களை தங்களின் தலை மேல் வைத்து அருள் புரிய வேண்டுமென பிரார்த்திக்கிறார்கள். ரமண மஹரிஷிகளின் சரித்திரத்திலும், அவர் தனது கரங்களினாலேயே தனது தாயாருக்கு முக்தியை அருளினாரென்பதையும் பார்க்கிறோம்.

(தொடரும்)

# Ancient Wisdom
for
# Modern Times

by

**Sri M.K.Ramanujam**

**Lectures in English**
**on**
**Srimad Bhagavatham**
**and**
**Sri Ramana Maharshi's**
**'Upadesa Saaram'**

***Daily 12th Jan 2009 to 18th Jan 2009***

Venue: **Narada Gana Sabha**.
254, TTK Road, Alwarpet, Chennai – 600 018.

Morn 7 to 8AM- Upadesa Saaram
Eve 6:30 to 8:30PM - Srimad Bhagavatham

***All are welcome***

For further Details contact: **Global Organization for Divinity India Trust**, 10/26, First Floor, Ramakrishnapuram 2nd Street, West Mambalam, Chennai Ph:-044-23718351

# SIGN★A★RAMA

**WHERE THE WORLD GOES FOR SIGNS**
**FULL SERVICE SIGN CENTER**



- Dimension Letters
- Banners
- Digital Printing
- Window Lettering
- Magnetic Signs
- Illuminated Signs
- Exterior Signs
- Vehicle Wraps
- Directional Signs
- NEON/LED Signs
- Trade Show Signs
- ACP Signs
- Channel Letters
- Engraved Signs
- And Much More!

## OVER 850 LOCATIONS WORLDWIDE


**CHENNAI**
**(044) 2848 2332**

23/35 West Cott Road, Next to Royapettah Hospital, Chennai - 600 014.
Chennai-600014@signarama.co.in

**www.signarama.co.in**

**Franchise Opportunities Available Ph:044-4221 8441**

**SEE OUR ADVT UNDER SIGNS - B2B**




## புது நூல் வெளியீடு

"தினம் தினம் திருநாளே .." என்ற தலைப்பில் சக்தி விகடன் இதழில் வெளியான உற்சாகமூட்டும் கட்டுரைகள் இப்போது நூல் வடிவில் வெளிவந்து இருக்கிறது. குறை ஒன்றும் இல்லாத வாழ்க்கைக்கு உத்தரவாதமாக இதிலுள்ள ஒவ்வொரு கட்டுரையும் விளங்குகிறது. நூலாசிரியர் மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீமுரளீதரஸ்வாமிஜி எளிய நடையில் மகான்களின் புண்ணிய வரலாறுகளையும், புராணக் கதைகளையும் மேற்கோள் காட்டி, அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு நம்மை பக்குவப்படுத்தி, பழக்கப்படுத்திக்கொண்டால், தினம் தினம் திருநாள்தான் என்பதை அருமையாகப் புரிய வைக்கிறார். நமது அன்றாட வாழ்க்கையின் ஊடாக, ஆன்மீகப்பாதையில் நம்மை மேம்படுத்திக்கொள்ள இது நிச்சயம் உதவும்.

ஆசிரியர்- விகடன் பிரசுரம்,
757,அண்ணாசாலை, சென்னை-2. போன்:42624283/4

குறிப்பு:இப்புத்தகம் நமது அலுவலகத்திலும் கிடைக்கும். போன்:24895875

| ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல் | |
|---|---|
| டிசம்பர் 9 ,23 | ஏகாதசி – மதுரபுரி ஆஸ்ரமம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : 044-2489 5875,
Email : contact@namadwaar.org, contact@madhuramurali.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

பிழை திருத்தம்: சென்ற இதழில் ஸ்ரீஸ்ரீநிவாஸ பெருமாளின் அவதார உத்ஸவம் நடந்த தேதி தவறாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. சரியான தேதி அக்டோபர் 9(விஜயதசமி) .

6/11/2008 மதுரபுரி ஆஸ்ரமத்தில் கோபாஷ்டமியன்று ஸ்ரீஸ்வாமிஜி பாடசாலை வித்யார்த்திகளுடன்



10/11/2008 சென்னை பிரேமிக பவனத்தில் துளசி கல்யாணம் நடைபெற்றது



29/10/2008 ஸ்ரீஸ்வாமிஜியின் அவதார தினத்தன்று



Registered with the Registrar of NewsPapers for India R. No. 62826 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| | |
|---|---|
| Regd. No.<br>TN / CC (S) DN / 119 / 06-08 | Lincensed to Post without prepayment<br>WPP No. TN / CC (S) DN / 51 / 06-08 |

[illegible] : 14 [illegible] 2008 [illegible] 5



6/11/2008 [illegible]

Published by V. Sankaran on behalf of Guruji
Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chenn
of Sri Maruthy Laser Printers, 200 (173), Pet

Related Websites : www.madhuramurali.org / www.na
E-mail : contact@madhuramurali.org; publi